**OS.No**. 38/2017 ரத்தினசாமி த/பெ. ராமசாமி

**PW**1 நாள். 23.08.2022

வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1,5 பிரதிவாதிகள் மற்றும் அசல் வழக்கு எண். 100/2017 ல் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதிகளுக்கெதிராகவும் பொது சுத்திகரிப்பு நிறுவனத்திற்கெதிராகவும் அசல் வழக்கு எண் 98/2021 தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் பொது சுத்திகரிப்பு நிறுவனம் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 8ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அவர்கள் பராமரித்து வரும் ஆவணங்களின் படி பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளர் ராமசாமி என்று தான் உள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் பங்குதாரர் என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை கொடுத்துள்ளேன். அவர்கள் முறையாக ஆவணங்களை பராமரிக்கவில்லை. நான் அவ்வாறு ஆவணங்களை எதுவும்ஒப்படைக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய அப்பாவே ஒப்படைத்துள்ளார். நான் தாக்கல் செய்துளள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தகப்பனார் இறந்து விட்டதால் பங்குதாரர் நிறுவனமானது உரிமையாளர் நிறுவனமாக மாற்றம் செய்யப்பட்டு விட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பாரா 7ல் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் எனக்கு 50 சதவீதமும் என்னுடைய அப்பாவிற்கு 50 சதவீதமும் பங்கு எனவும் என்னுடைய தகப்பனார் இறந்து விட்டதால் அவருடைய 50 சதவீத பங்கை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இதுவரை பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் கூட்டாண்மை நிறுவனத்தை பொறுத்து இந்த 3 வழக்குகள் தவிர வேறு வழக்குகள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனது சாட்சியத்தில் தாவா சொத்தில் 20000 சதுரடி கட்டிடத்தில்பிரின்ஸ் டையிங் நிறுவனம் 10000 சதுரடியிலும் ராஜேஸ்வரி பிளீச்சிங் 10000 சதுரடியிலும் அமைந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். தற்போது எனக்கு அந்த 20000 சதுரடி தனிப்பட்ட முறையில் பாத்தியமா கூட்டுகுடும்ப படி பாத்தியமா என்றால் நான் நிறுவனத்தின் உரிமையாளர் என்பதால் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம். அவ்வாறு எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 6 பங்காக பிரித்து எனக்கு 1 பங்கை ஒதுக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5ல் 1 பங்கு கேட்டுள்ளேன்.நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பூமியுடன் 20000 சதுரடி அளவுள்ள கட்டிடத்தையும் சேர்த்து தான் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். தாவாசொத்து விபரத்தில் முதல் 3வரியில் 1 ஏக்கர் 45 செண்ட்எனவும், மேற்படி பூமியில் உள்ள 20000 சதுரடி கட்டிடம்சகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1 ஏக்கர் 50க்கு தான் போட்டுள்ளேன். தாவா சொத்தை பார்வையிட்டு ஆணையர் சொத்தை அளந்தாரா என்றால் இல்லை. ஆணையர் அறிக்கையில் எந்த இடத்திலும் கட்டிடத்தின் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் ஓட்டுகட்டிடமானது சிதலமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வெளியூர் சென்றிருந்த சமயத்தில் 2500 சதுரடி நிலத்திலிருந்த கட்டிடத்தை சேதப்படுத்தி

விட்டார்கள். ஆணையர் சொத்தை பார்வையிட்ட பின்பும் ராஜேஸ்வரி பிளீச்சிங் கட்டிடத்தையும் சேதப்படுத்திவிட்டார்கள். அவ்வாறு சேதப்படுத்தியது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் எதாவது கொடுத்தேனா என்றால் இந்த வழக்குநிலுவையில் உள்ளதால் கொடுக்கவில்லை. அவ்வாறு இடித்த விபரத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தெரிவித்தேனா என்றால் வழக்கு விசாரணை சமயத்தில் தெரிவிக்கலாம் என விட்டுவிட்டேன். உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ராஜேஸ்வரி பிளாண்டுக்கு தனியாக கட்டிடம் எதுவும் இல்லை என்றாலும் 10000 சதுரடியிலும் அமைந்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் தாவாசொத்தில் சிமெணட் சீட் போட்ட கட்டிடமும், தகர சீட் போட்ட கட்டிடமும் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். ஓட்டு கட்டிடமும் உள்ளது. சிமெண்ட் சீட், கலர் சீட் போட்ட கட்டிடத்தை தயாநிதி தான் கட்டியுள்ளார் என்றால் இல்லை. மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு தயாநிதி பெயரில் உள்ளது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 28/2017 பிரதிவாதிகள் தரப்பினர்கள் உள்ளார்கள் என்றால் ஆமாம். 7ம் பிரதிவாதி கார்ப்பரேசன் வங்கி என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 7ம் பிரதிவாதி எனக்குறிப்பிடப்பட்டுள்ளது கார்ப்பரேசன் வங்கி என்றால் ஆமாம். 09.07.2009 தேதியில் என்னுடைய தகப்பனார் கார்ப்பரேசன் வங்கியில் கடன் பெறுவதற்காக அசல் ஆவணங்களை ஒப்படைத்து அடமானக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு தெரியவந்தது. என்னுடைய தாயார் கொடுத்த பணத்தின் மூலமாகத்தான்மேற்படி அடமானக்கடனுக்காக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2011ல் இறந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. வங்கிக்கான முழு கடனையும் செலுத்தியதாக 01.12.2016ல் வங்கியில் பதிவு செய்யப்பட்ட ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதை மோசடியாக உற்பத்தி செய்துள்ளார்கள். மேற்படி ரசீதில் கடனை முழுவதையும் ராமசாமி கவுண்டர் மனைவி சரஸ்வதி செலுத்தியதாக குறிப்படப்பட்டுள்ளது என்றால் நாங்கள் செலுத்தியதை மறைத்து மோசடியாக தயார்செய்துள்ளார்கள். மேற்படி ரசீது தவிர வங்கிகடனை சரஸ்வதி செலுத்தியதாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுவும் மோசடியாகத்தான் தயார் செய்துள்ளார்கள். வங்கி மீது எதுவும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யாரை வைத்து எத்தனை முறை பஞ்சாயத்து பேசினோம் என்றால் எங்களுடைய உறவினர் OK Tex கந்த சாமி என்பவரை வைத்து பலமுறை பஞ்சாயத்து பேசினோம். மேற்படி கந்தசாமியை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். எனது அப்பா, அம்மா எங்கு குடியிருந்தார்கள் என்றால் முருகம் பாளத்தில் குடியிருந்தார்கள். அது என்னுடைய அம்மாவுடைய அம்மாவீடு என்றால் சரிதான். என்னுடைய அப்பா அங்கு வைத்து தான் இறந்தார் என்றால் ஆமாம். என்னுடைய அப்பா இறப்பதற்கு 1 1/5 வருடம் முன்பு படுத்த படுக்கையாக இருந்ததாக சொல்லியுள்ளேன். அந்த சமயத்தில் சிசிக்சை எதுவும் எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய அப்பாவிற்கு 15 நாட்களுக்கு முன்பாகத்தான் உடல் நிலை சரியில்லாமல் போனது என்றால் சரியல்ல. 1 வருடமான நடமாட முடியாமல் தான் இருந்தார். என்னுடைய அப்பா குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் தான் இறந்தாரா என்றால் சாட்சி முதலில் ஞாபகம் இல்லை எனவும் பின்னிட்டு வீட்டில் வைத்து தான் இறந்தார் எனவும் தெரிவித்தார். மாரடைப்பு வியாதிக்காக திருப்பூர் DSK

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்களா என்றால் ஞாபகம் இல்லை. 21.07.2011 தேதி என்னுடைய அப்பா தாவா சொத்துக்களை பொறுத்து தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிவைத்தாரா என்றால் இல்லை. மேற்படி தான செட்டில் மெண்ட் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் தயாநிதி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் பார்த்தேன். அந்த சமயத்தில் என்னுடைய அப்பாவிற்கு சுயநினைவில்லாமல் இருந்தது. சொத்தும் வங்கியில் அடமானத்தில் இருந்தது. அந்த சமயத்தில் வேறு நபரை வைத்து மோசடியாக தயார் செய்துள்ளார்கள். என்னுடைய சகோதரி ராஜேஸ்வரியின் கணவர் பெயர் என்றால் முத்துகுமார். தகப்பனார் பெயர் சுப்பணன்.தற்போது என்னிடம் காட்டப்படும் தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் முத்து குமார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் உள்ள புகைப்படம் என்னுடைய தகப்பனாருடையது என்றால் ஆமாம். ஆனால் அதிலுள்ள கையெழுத்து அவருடையது அல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையை வங்கியில் உள்ள அடமானக்கடன் பத்திரத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.